## 19. தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம்

---

### 19.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 11 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 19.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) இல் காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் 19.4 இலிருந்து 19.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

05 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 19.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 19.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அலுவலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 19.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 19.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**19.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 அளவில் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 723,225 ஆனதுடன் அவை ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

**19.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபனவிதிக் கோவை | | |
| (i) V அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவு | - | அலுவலகத்தின் இணைப்புச் செயலாளர் ஒருவர் 2012 செப்தெம்பர் 4 ஆந் திகதி தொடக்கம் 2012 ஒக்டோபர் 7 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சேவைக்கு அறிக்கை இடாதிருந்ததுடன் முறையான வகையில் விடுமுறை அங்கீகரித்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>உத்தியோகத்தர் இக்காலப்பகுதியின் போது அங்கீகாரமின்றி வெளிநாட்டிற்குச் சென்றிருந்தமையும் அக்காலப்பகுதியில் முழுச் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 70,770 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபம் | | சகல உத்தியோகத்தர்களும் வருகை தருகின்ற மற்றும் வெளிச் செல்கின்ற நேரங்கள் முறையான வகையில் கையோப்பத்துடன் குறிப்பிடப்பட வேண்டி இருந்த போதிலும் 3 உத்தியோகத்தர்கள் பேணப்படுகின்ற வரவுப் பதிவேட்டில் வருகை மற்றும் வெளிச் செல்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறித்த வகையில் வருகை மற்றும் வெளிச் செல்கை தொடர்பாக பிரமாணங்களை கடைப்பிடிப்பதில் சிரமம் உள்ளதாகவும் அரச அலுவலகத்திற்கேனும் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக யதார்த்தமாகக் கவனிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார். |

(ஆ) நிதிப்பிரமாணம்

-------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நி.பி 102-110 | 500,000 | வாகனவிபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கு இழப்பு தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 262(2) | 320,291 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களிலும் அவற்றை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களிலும் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற முத்திரை இடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) நி.பி 1646 | - | மோட்டார் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றுநிருபம்

----------------------------------------------

| | | |
|---|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1 ஆம் பந்தி | 1,366,518 | வெளிநாட்டு பிரயாணங்களின் போது விமானப் பயணச் சீட்டைக் கொள்வனவு செய்தல் இலங்கை விமான சேவைகள் கம்பனி அல்லது மிஹின் லங்கா கம்பனியில் செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்

----------------------------------------------

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1.3 – 1.1.7 வரையான பந்திகள் | 905,130 | இடம்மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதியை உரிய காலத்தின் போது மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**19.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 3 | 2 | 1 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 11 | 6 | 5 |
| (இ) | இரண்டாம் நிலை | 21 | 19 | 2 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 17 | 15 | 2 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 10 | 10 | - |
| | மொத்தம் | 62 | 52 | 10 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.